**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 12.12.2018–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு சாதாரணக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி,
நாள் : **12.12.2018**

தனி அலுவலர்,
இராசிபுரம் நகராட்சி

**பொருள்கள்**

**(1)** இராசிபுரம் நகராட்சியில் தூய்மை பாரதத் திட்டத்தின்கீழ் தட்டான்குட்டை உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை Bio Mining முறையில் அகற்ற, மூன்றாம் அழைப்பாக **01.11.2018–**இல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

**1)** Sri Srinivasa Waste Management Service Private Limited, Chennai – மதிப்பீட்டைவிட **7.98%** அதிகம்.
**2)** The wallajapet Agri Engineering Co-op. Service Centre VV 2664, wallajapet, Vellore (Dt) - மதிப்பீட்டைவிட **8.76%** அதிகம்.

வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட **7.98%** அதிகமாக விலை விகிதம் வழங்கியுள்ள M/s. Srinivasa Waste Management Service Private Limited, Chennai அவர்களது ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தினை குறைத்து வழங்கக் கோரப்பட்டது. அதன்படி, தனது முந்தைய ஒப்பந்தப்புள்ளி தொகையினை **`. 690.00** / cum என்பதற்கு பதிலாக **`. 670.80** / cum என விலை குறைப்பு செய்து தனது **10.12.2018** தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு விலைக் குறைப்பு செய்யப்பட்ட விலை விகிதம் **4.97** % மதிப்பீட்டைவிட அதிகமாக உள்ளது.

இவ்வொப்பந்தப்புள்ளி மூன்றாம் அழைப்பாக உள்ளதாலும், நகராட்சி பொறியாளர் கையேடு **2.7.2–**இல் பணியின் அவசியம் கருதி முதல் அழைப்பில் மதிப்பீட்டைவிட 5% வரை அதிகமாக குறிப்பிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பணியை முடித்து அரசுக்கு அறிக்கை அனுப்ப வேண்டியுள்ளதாலும், மதிப்பீட்டைவிட **4.97%** விலை விகிதம் வழங்கியுள்ள M/s. Srinivasa Waste Management Service Private Limited, Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** இப்பணிக்கு மூன்றாம் ஒப்பந்தப்புள்ளியாக உள்ளதாலும், பணியின் அவசியம் கருதியும், மதிப்பீட்டைவிட **4.97%** கூடுதலான விலை விகிதம் வழங்கியுள்ள M/s. Srinivasa Waste Management Service Private Limited, Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**(இ1/1899/18)**

**தீர்மானம் எண். 464**

ஏற்கப்பட்டது

(2) இராசிபுரம் நகராட்சியில் 5 TPD அளவுள்ள நுண்ணுயிர் உரம் தயாரிப்பு மையம் (MCC) அமைக்கப்படவுள்ள வீட்டு வசதி வாரிய காலனி இடத்தில் மண் தாங்கு சக்தி (Safe Bearing Capacity of soil) பரிசோதனை செய்ய `. 10620/– செலுத்த சேலம், அரசு பொறியியற் கல்லூரியிலிருந்து கேட்பு வரப்பெற்றுள்ளது. பரிசோதனைக் கட்டணம் `. 10620/– செலுத்தவும், செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/1308/16)

**தீர்மானம் எண். 465**

அனுமதிக்கப்பட்டது

(3) இராசிபுரம் நகராட்சி சிவன் கோவில் அருகில் தனியார் நிறுவனங்களுக்கான பொறுப்புணர்வு நிதி (CSR) மூலம் தானியங்கி குடிநீர் மையம் அமைக்க விருப்ப அறிவிப்பு **11.10.2018** அன்று மாநில அளவில் வெளியிடப்பட்டதற்கான விளம்பரக் கட்டணங்கள் வருமாறு.

| | | |
|---|---|---|
| 1) Business standard, தமிழ்நாடு | - | `. 1350/- |
| 2) தினத்தந்தி, தமிழ்நாடு | - | `. 76250/- |
| | | `. 77600/- |
| மாநில / மத்திய சரக்கு மற்றும் சேவை வரி | – | `. 3880/- |
| **மொத்தம்** | – | **`. 81480/-** |

`. 81480/- விளம்பரக் கட்டணம் ரவி பப்ளிசிட்டி சர்வீஸ் நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/1766/18)

**தீர்மானம் எண். 466**

அனுமதிக்கப்பட்டது

(4) கீழ்க்கண்ட பணிக்கு 24.10.2018 அன்று நடைபெற்ற Expression of interest (EOI)-இல் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வேலையின் பெயர்** | **ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்)** | **EOI-இன்படி Automatic Vending Machine நிறுவ செலவிடும் தொகை `.** |
|---|---|---|

| | | |
|---|---|---|
| வார்டு எண். 1, சிவன் கோவில் அருகில் 1 இடத்தில் சமூகநல குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் பணி ( 1000 litre/ hour Capacity) மற்றும் பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணி தனியார் பங்களிப்புடன் மேற்கொள்ளுதல் | M/s.Dharana Infrastructure Projects Private Limited, Chennai, | 1975000/- |

**அலுவலகக் குறிப்பு :** 1) தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கு M/s.Dharana , Infrastructure Projects Private Limited, Chennai நிறுவனத்திற்கு ஒப்பந்த நிபந்தனைகளுக்குட்பட்டு தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்க தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(இ2/1766/18)

**தீர்மானம் எண். 467**

அனுமதிக்கப்பட்டது

**( 5 )** இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு நான்கு பிரிவுகள் மற்றும் நகராட்சி அலுவலகம் ஆகிய 5 இடங்களில் கணினி மூலமாக கைரேகை வருகைப் பதிவு (Bio metric) அமைக்கும் `. 375000/– மதிப்பீட்டுப் பணிக்கு 30.11.2018 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) M/s. Gold Soft Computers, Komarapalayam – `. 373750/–
2) M/s. Perennial systems, Swarnapuri, Salem – `. 424800/–

மதிப்பீட்டைவிட குறைவான M/s. Gold Soft Computers நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மதிப்பீட்டைவிட குறைவான M/s. Gold Soft Computers நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

(இ2/2399/18)

**தீர்மானம் எண். 468**

அனுமதிக்கப்பட்டது

**( 6 )** இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு நான்கு வாகனங்களுக்கு GPS கருவிகள் பொருத்தும் `. 100000/– மதிப்பீட்டுப் பணிக்கு 30.11.2018 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) M/s. Gold Soft Computers, Komarapalayam – `. 96760/–
2) M/s. Perennial systems, Swarnapuri, Salem – `. 143960/–

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் வழங்கியுள்ள M/s. Gold Soft Computers நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** குறைவான விலை விகிதம் வழங்கியுள்ள M/s. Gold Soft Computers நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**(இ1/2400/18)**

**தீர்மானம் எண். 469**

அனுமதிக்கப்பட்டது

(7) இராசிபுரம் நகராட்சி பேருந்து நிலையத்தில் பழுதடைந்த கடைகளை இடித்து விட்டு புதிய கடைகள் கட்டுதல் பணிக்கு `. **140.00** இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் கட்டுமானப் பணிக்கான தொகையினை முழு அரசு மான்யமாகவோ அல்லது வட்டியில்லா கடனாகவோ அல்லது அரசு நிறுவனங்களிலிருந்து கடனாகவோ வழங்கக் கோரி நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு முன்மொழிவு அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாததால் திட்ட மதிப்பீட்டு தொகையினை முழு அரசு மான்யமாகவோ அல்லது வட்டியில்லா கடனாகவோ அல்லது அரசு நிறுவனங்களிலிருந்து கடனாகவோ அனுமதிக்க கோரி முன்மொழிவுகள் நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு அனுப்ப மன்ற அனுமதி அனுமதிக்கலாம்.

**(இ1/2904/18)**

**தீர்மானம் எண். 470**

அனுமதிக்கப்பட்டது

ஒம் /– ரா. மகேஸ்வரி,
தனி அலுவலர்

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.